அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல.14/2000

எனது இல: ஆ:111/2/3/3
அரசாங்க நிர்வாக உள்நாட்டு அலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07
2000 செப்டம்பர் மாதம் 05 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் தலைமைச் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவர்க்கும்.

## 2000 பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்காக வேண்டிய பணித்தொகுதி

2000 ஒக்றோபர் மாதம் 10 ஆந் திகதி நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலின் போது தேர்தல் ஆணையாளருக்கும் கடமை பொறுப்பு உத்தியோகத்தர்களுக்கும் மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களினதும் உதவி இன்றியமையாதது. தேர்தல் கடமைகளுக்காக இணைக்கப்படும் உத்தியோகத்தர்கள் மட்டுமல்லாமல் ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களும் தேவைப்படும் போது சேவையில் ஈடுபடுத்துவதற்காக தயாராக இருக்க வேண்டும்.

ஆகையால் பின்வரும் வழிமுறைகளை கையாள வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது.

(அ) 2000.10.01 இருந்து 2000.10.15 ஆந் திகதி வரையிலான (இரண்டு நாட்களும் அடங்கலாக) காலத்திற்குள் அரச சேவையாளர் அல்லது மாகாண அரச சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு விடுமுறை அனுமதிக்கப்படமாட்டாது என்பதுடன் இக் காலத்திற்காக ஏற்கனவே விடுமுறை அனுமதிக்கப்பட்டிருந்தால் அவ் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதாக கருத வேண்டும். உத்தியோகத்தர் ஒருவரின் சுகவீனம் மற்றும் மிக விசேடமான ஒரு காரணம் சம்பந்தமாக விடுமுறை வழங்கும் போது தொடர்புடைய அமைச்சின் செயலாளர் அல்லது மாகாண சபை செயலாளர்கள் தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்து அதனை முடிவு செய்ய வேண்டும்.

(ஆ) 03 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கு சம்பளமில்லா விடுமுறைகளின் பேரில் வெளிநாடு செல்லவிருக்கின்ற உத்தியோகத்தர்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கடமை அல்லது தனிப்பட்ட விடயங்களுக்காக மேற் கூறிய காலத்திற்குள் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படலாகாது. ஏற்கனவே அவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டிருந்தால் அவ்விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டதாக கருத வேண்டும்.

(ஐ) மிக விசேடமான ஒரு விடயம் காரணமாக ஓய்வுபெறுவோர் உத்தியோகத்தர் வெளிநாடு செல்ல வேண்டி இருப்பின் அதனை ஒத்தி வைக்கவும் முடியாதிருப்பின் அது பற்றி எல்லா விபரங்களும் அடங்கிய அறிக்கையொன்றை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் அல்லது தலைமைச் செயலாளர் சனாதிபதியின் செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(ச) வெளிநாட்டு தூதுக் குழுக்களுடன் பேச்சு வார்த்தைகள், மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றை ஏற்படுத்தும் போது மேற்குறிப்பிட்ட காலத்திற்குள் உத்தியோகத்தர்களை தேர்தல் கடமையில் ஈடுபடுத்துவதற்குத் தேவை ஏற்படாதவாறு அவற்றை ஏற்பாடு செய்வதற்கு அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களும் மாகாண சபைகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேற்படி மதியுரைகளை தங்கள் அமைச்சை நிறுவனத்தைச் சேர்ந்த எல்லா உத்தியோகத்தர்களுக்கும் அறிவிப்பதற்குரிய ஒழுங்குகளை செய்யுமாறு அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஒப்பம்: பாலித்த பண்டுசேன
செயலாளர்
அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு